# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 13711/SCIC/2024**

திரு.N.நலராமன் - மேல்முறையீட்டாளர்
மக்கள் சட்ட விழிப்புணர்வு இயக்கம்
எண்..42, பிரதான சாலை,
கீழூர், திருப்போரூர்
செங்கல்பட்டு மாவட்டம்- 603 108.
**கைபேசி**- 6382191727

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்.
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்போரூர் வட்டம்
செங்கல்பட்டு மாவட்டம்-603 110.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **01.08.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 09.09.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 21.10.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01/08/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்திற்கு உட்பட்ட நெல்லிக்குப்பம் வருவாய் கிராமத்தில் வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திருமதி.கமலவேணி அவர்களின் பணிப்பதிவேடுகளை கள ஆய்வு செய்யவும் தேவையான ஆவணங்களை நகலெடுக்கவும் சான்றிட்ட நகல் பெறவும் அனுமதி

வேண்டி தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2(J)-ன் கீழ் இந்த மனுவை சமர்ப்பிக்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.N.நலராமன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.த.அரிகணேசபாண்டியன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்போரூர் வட்டம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 16/08/2024 தேதியிட்டு தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதில் "**பணிப் பதிவேடு என்பது மூன்றாம் நபர் குறித்த தகவல் என்பதால் தகவல் வழங்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 11-ன் கீழ் வழிவகை இல்லை என்ற விவரம் தகவலாக தெரிவிக்கப்படுகிறது**" எனக் குறிப்பிட்டுள்ளார். **பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்போரூர் வட்டம் மேற்குறிப்பிட்ட 16/08/2024 தேதியிட்ட கடிதத்தை மீண்டும் உடனடியாக மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 13711/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்.
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்போரூர் வட்டம்
செங்கல்பட்டு மாவட்டம்-603 110.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு.N.நலராமன்
மக்கள் சட்ட விழிப்புணர்வு இயக்கம்
எண்..42, பிரதான சாலை,
கீழூர், திருப்போரூர்
செங்கல்பட்டு மாவட்டம்- 603 108.
கைபேசி- 6382191727

RG/Sr.PC